**<u>இணைப்பு 02</u>**

## 05.<u>போட்டி விபரங்கள்</u>

சகல போட்டிகளினதும் விபரங்கள் கீழுள்ள அட்டவணையின் பிரகாரமாகும் என்பதுடன் ஓவியம், சிறுவர் கதைகள், குறுநாடகம் செய்யுள் உறையுள் போட்டிகளின் பொருட்டான விபரங்கள் மாத்திரம் கீழே குறிப்பிடப்படுகின்றவாறாகும்.

I. ஓவியப் போட்டியின் பொருட்டு 18x14 அளவிலான பிரிஸ்டல்போட் அல்லது சித்திரம் வரையும் தாளைப்பயன்படுத்தவும். வெளிச்சம, இருட்டு மற்றும் முப்பரிமானப் பண்புகள் வெளிக்காட்டப்படுகின்ற விதத்தில் ஓவியம் வரையச் செய்யவும். வெளியீட்டு ஓவியங்களை மாத்திரம் உருவாக்கிக் கொள்ள வேண்டியதுடன் அலங்கார ஓவியங்களை வரைதலாகாது. <u>பிளேடிக்னம், மற்றும் பேனாக்களை பயன்படுத்தலாகாது.</u>

II. சிறுவர் கதைகள் போட்டியின் பொருட்டு 03 மணித்தியால காலத்தினை வழங்கி சிறுவர்களுக்கு தங்களது தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கமுள்ள சிறுவர் கதை ஒன்றினை எழுத சந்தர்ப்பத்தினை வழங்கி பூர்த்தி செய்த கதைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் அதனை வங்கிச் சங்க மட்டத்திலும், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும், மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களிலும் அக் கதைத்தொகுதியினை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட கதைத் தொகுதியின் பின் பக்கத்தில் புள்ளிகளை வழங்கும் பொருட்டு குறித்த படிவத்தினை பயன்படுத்த முடியும் (இணைப்பு இலக்கம் 07) சிறுவர் கதைத் தொகுதியினை உருவாக்கி பொறுப்பேற்றுக்கொள்ளும் போது அந்த நடுவர் குழு இது போட்டியில் கலந்து கொண்டு உருவாக்கப்பட்ட கதைத்தொகுதி ஒன்றாகும் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

III. உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் மற்றும் புள்ளிகளை வழங்கும் படிவப் புத்தகத்தில் கழறாதவாறு இணைத்து சிறுவர் கதை ஆக்கத்திறனை மாத்திரம் குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சிறுவர் கதை ஆக்கங்கள் போட்டியிலிருந்து நிராகரிக்கப்படும்.

IV. சிறுவர் கதைகள் போட்டியின் பொருட்டு தேசிய போட்டிகளுக்கு பிள்ளைகளை கலந்து கொள்ளச் செய்யலாகாது என்பதுடன் அவர்களால் படைக்கப்பட்ட “சிறுவர் கதை ஆக்கம்” (சிறுவர் ஒருவர் போட்டிக்காக முன்னிலைப்படுத்துகின்ற சிறுவர் கதைப் புத்தகத்தில் போட்டியாளரின் பெயர், வயதுத் தொகுதி, பிரதேச செயலகப் பிரிவு, மற்றும் மாவட்டத்தினை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.)

V. குறு நாடகப் போட்டியின் பொருட்டு ஏற்புடைய **<u>ஆத்மீக அபிவிருத்தி /சமூக ரீதியாக சமூகத்திற்கு சிறந்த செய்தி ஒன்றினை வழங்க கூடிய தலைப்பு</u>** ஒன்றினை தெரிவு செய்து கொள்ளல் வேண்டியதுடன் ஆகக் குறைந்த மேடை அலங்காரங்களை பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும் (மேடையினை ஆயத்தப்படுத்த 05 நிமிடங்களுக்கு மேல் செல்லுமாயின் புள்ளிகள் குறைவதற்கு அது காரணமாக அமையும்.)

VI. செய்யுள், மற்றும் உறையுளின் பொருட்டு 1 1/2 மணித்தியால காலத்தினை வழங்கி சூழலைப் பாதுகாத்தலும் இயற்கை அழகு என்பதனை வர்ணனையுடன் படைத்தல் வேண்டும்.